சுதந்திரப் போராட்ட வீரர் குமரிக் கோமேதகம் ஆர்.பொன்னப்ப நாடார் திருஉருவச் சிலை: நாகர்கோவிலில் ஸ்டாலின் திறந்தார்

நாகர்கோவில், பிப். 25–

நாகர்கோவிலில் சுதந்திரப் போராட்ட வீரர் குமரிக் கோமேதகம் ஆர். பொன்னப்ப நாடாருக்கு ரூ.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள உருவச் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள சிலை இது.

கன்னியாகுமரியை தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கான போராட்டத்தில் மார்ஷல் நேசமணியின் போர்ப்படைத் தளபதியாக விளங்கியவர், திருவிதாங்கூர் கொச்சி சட்டமன்றப் பேரவைக்கு இருமுறையும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மும்முறையும் தேர்தெடுக்கப்பட்டவர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக விளங்கியவர் ஆர். பொன்னப்ப நாடார்.

இத்தகைய பல்வேறு பெருமைகளைப் பெற்றிருந்தாலும் எளிமையாக வாழ்ந்து ஏழை மக்களின் குரலாய் ஒலித்து, மக்கள் நெஞ்சில் மறையாமல் வாழ்பவர், குமரிக் கோமேதகம் எனப் போற்றப்பட்ட பெருமைக்குரியவர். அவரது நூற்றாண்டு நிறைவு பெறுவதையொட்டி, அவர் தொண்டுகளைப் போற்றி அவருக்கு நாகர்கோவில் நகரில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை நிறுவப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் சுதந்திரப் போராட்ட வீரர் குமரிக் கோமேதகம் ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ள திரு வுருவச் சிலை நிறுவப்பட்டு உள்ளது.

முன்னதாக, கன்னியாகுமரி நகராட்சியில் 1 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா ஆண்டு நினைவு அலங்கார வளைவினை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் குமார், பிரின்ஸ், தாரகை கத்பட், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ஆர். மகேஷ், துணை மேயர் மேரி பிரின்சி லதா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆஸ்டின், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹெலன் டேவிட்சன், மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா.வைத்திநாதன், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். அழகு மீனா, பொன்னப்ப நாடார் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேல்மலையனூர் அங்காளம்மன் கோயில் தெப்பல் உற்சவம்: திரளான பக்தர்கள் தரிசனம்

செஞ்சி, பிப். 25–

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோயிலில் மாசி பெருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற தெப்பல் உற்சவத்தில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தளமாக உள்ள அங்காளம்மன் கோயிலில் ஆண்டு தோறும் மாசி பெருவிழா நடைபெற்று வருவது வழக்கம். இந்நிலையில் மாசி பெருவிழா கடந்த 15–ம்தேதி மகா சிவராத்திரி அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. 16 ஆம் தேதிமயான கொள்ளை திருவிழாவும் 19ஆம் தேதி தீமிதி திருவிழாவும் நடைபெற்றது. 7–ம் நாள் திருவிழாவான திருத்தேர் வடம் பிடித்தல் 21–ந் தேதி மாலை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 23–ந் தேதி பூப்பலுக்கு விழா நடைபெற்றது

இதைத் தொடர்ந்து நேற்றிரவு அங்காளம்மனுக்கு தெப்பல் உற்சவ விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இதையொட்டி மூலவர் அங்காளம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகாதீபாரதனை காண்பிக்கப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட உற்சவர் அங்காளம்மன் தங்க நிற பல்லக்கில் வீதி உலா வந்தார். அக்னி குளத்தில் இருந்து தீர்தவாரி மண்டகப்பாடி ஊர்வலமாக மேளம் தாளம் முழங்க கோவில் குளத்திற்கு கொண்டு வரப்பட்டு உற்சவர் அங்காளம்மன் தெப்பல் உற்சவத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். தொடர்ந்து ஒன்பது முறை தெப்பலில் வலம் வந்த உற்சவர் அங்காளம்மனுக்கு சிறப்பு தீபாரதனை நடைபெற்றது.இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

விழாவிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் மேல்மலையனூர் சக்திவேல், கோவில் அறங்காவல் குழு தலைவர் ஏழுமலை, அறங்காவலர்கள் சுரேஷ் மதியழகன், பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம் மேலாளர் சதீஷ், காசாளர்மணி உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்தனர்.

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் தாம்பரம்
ந.க.எண்.5051/2025/அ.4

M.சுரேஷ், த/பெ. மாடமுத்து ...மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் கோட்டம், பல்லாவரம் வட்டம், அனகாபுத்தூர் கிராமம், எண்.61, காமராஜபுரம், திருநீர்மலை மெயின் ரோடு, மரியன் தெரு என்ற முகவரியில் வசிக்கும் நான் என்னுடைய மகள் செல்வி சர்வமகாஸ்ரீ என்பவர் கடந்த 25.04.2023 அன்று மேற்படி விலாசத்தில் உள்ள வீட்டில் பிறந்தாள். மேற்படி என் மகளின் பிறப்பை பதிவு செய்ய தவறி விட்டேன். மேற்படி என் மகளின் பிறப்பு பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மேற்படி கோட்டாட்சியருக்கு மனு செய்துள்ளேன். மேற்படி மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் தங்கள் ஆட்சேபணையை 15 நாட்களுக்கு மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

M.சுரேஷ்
மனுதாரர்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தாம்பரம்
அசல் வழக்கு எண்.64/2024

திருமதி. விமலா மற்றும் பலர் ...வாதிகள்

எதிர்

G. சுப்ரமணியம் மற்றும் பலர் ...பிரதிவாதிகள்

பெறுநர்
G. சுப்ரமணியம் (R1/D1),
த/பெ. G. கொண்டய்யா,
எண்.124, அலடி ரோடு,
விருதாச்சலம்,
கடலூர் மாவட்டம் 606001

அறிவிப்பு

மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தங்களுக்கு எதிராக 12.06.2015 தேதியிட்ட தாங்கள் இவ்வழக்கில் இரண்டாம் பிரதிவாதி ஆன S. பரமசிவம் என்பவருக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் செல்லாது என விளம்புகை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி தாம்பரம் மாவட்டம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கானது அசல் வழக்கு எண்.64/2024 என பதிவு ஆகி உள்ளது. மேலும் மேற்படி வழக்கில் தங்களுக்கு எதிராக இடைகால மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது இடைக்கால மனு எண்.3/2024, ஆக பதிவாகி உள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்.64/2024 மற்றும் இடைக்கால மனு எண்.3/2024 ஆகிய இரண்டிலும் தங்களின் வருகைக்காக 04.03.2026 அன்று காலை 10.30 மணி அளவில் போடப்பட்டுள்ளது. இது குறித்து தங்களுக்கு ஆட்சேபனை இருப்பின் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி 04.03.2026 அன்று காலை 10.30 அளவில் மேற்படி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மேற்படி அசல் வழக்கிலும் மற்றும் இடைக்கால மனுவிலும் தங்களுக்கு எதிராக ஒரு தலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை அறியவும்.

M. கோபாலகிருஷ்ணன்
T. பாலாஜி
மனுதாரர்கள்/வாதிகள் வழக்கறிஞர்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தாம்பரம்
அசல் வழக்கு எண்.64/2024

திருமதி. விமலா மற்றும் பலர் ...வாதிகள்

எதிர்

G. சுப்ரமணியம் மற்றும் பலர் ...பிரதிவாதிகள்

பெறுநர்
1. S. பரமசிவம் (R2/D2),
த/பெ. G. சுப்ரமணியம்,
எண்.2/99, இ.வி.ஆர்.தெரு,
பெரமனூர், மறைமலைநகர்,
திருவஞ்சேரி, சேலையூர்,
சென்னை–600073
2. D. சந்துரு (R4/D4),
த/பெ. V. தேவகுரு
எண்.103, இரயில்வே தெரு,
செங்கல்பட்டு மாவட்டம்–603209

அறிவிப்பு

மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தங்களுக்கு எதிராக 12.06.2015 தேதியிட்ட G. சுப்ரமணியம் இவ்வழக்கில் இரண்டாம் பிரதிவாதி ஆன S. பரமசிவம் என்பவருக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் செல்லாது என விளம்புகை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி தாம்பரம் மாவட்டம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கானது அசல் வழக்கு எண்.64/2024 என பதிவு ஆகி உள்ளது. மேலும் மேற்படி வழக்கில் தங்களுக்கு எதிராக இடைகால மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது இடைக்கால மனு எண்.3/2024, ஆக பதிவாகி உள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்.64/2024 மற்றும் இடைக்கால மனு எண்.3/2024 ஆகிய இரண்டிலும் தங்களின் வருகைக்காக 04.03.2026 அன்று காலை 10.30 மணி அளவில் போடப்பட்டுள்ளது. இது குறித்து தங்களுக்கு ஆட்சேபனை இருப்பின் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி 04.03.2026 அன்று காலை 10.30 அளவில் மேற்படி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மேற்படி அசல் வழக்கிலும் மற்றும் இடைக்கால மனுவிலும் தங்களுக்கு எதிராக ஒரு தலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை அறியவும்.

M. கோபாலகிருஷ்ணன்
T. பாலாஜி
மனுதாரர்கள்/வாதிகள் வழக்கறிஞர்

படிவம் எண். CAA-2

[நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 230 (3) மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள், 2016-ன் விதி 6 மற்றும் 7-ன் கீழ்]

CA(CAA)/104(CHE)/2025

AAPEX அபக்ஸ் பவர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்,
(பரிமாற்றப்படும் நிறுவனம்)

மற்றும்

PPN பவர் ஜெனரேட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
(பரிமாற்றிக்கொள்ளும் நிறுவனம்)

மற்றும்

அவர்களுடைய பங்குதாரர்கள் மற்றும் கடனாளிகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள் திட்டம் விஷயமாக

AAPEX பவர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்,
நிறுவனங்கள் சட்டம், 1956 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம்,
அதன் பதிவு அலுவலகம் : ஜாவர் பிளாசா, 3வது தளம்,
1-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034,
தமிழ்நாடு, இந்தியா, ,,, விண்ணப்பதாரர் / பரிமாற்றப்படும் நிறுவனம்

பரிமாற்றப்படும் நிறுவனத்தின் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநர்களின் கூட்டம் குறித்த அறிவிப்பு மற்றும் விளம்பரம்

பிப்ரவரி 10, 2026 தேதியிட்ட உத்தரவின் மூலம், மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வு, விண்ணப்பதாரர் நிறுவனத்தின் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநர்களின் கூட்டங்களை நடத்த உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம், AAPEX பவர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், (பரிமாற்றப்படும் நிறுவனம்) மற்றும் PPN பவர் ஜெனரேட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் (பரிமாற்றிக்கொள்ளும் நிறுவனம்) மற்றும் அவர்களின் பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்குநர்கள் இடையேயான ஒருங்கிணைப்புத் திட்டத்தை பரிசீலித்து, தேவைப்பட்டால், மாற்றங்களுடன் அல்லது மாற்றங்கள் இல்லாமல் ஒப்புதல் அளிக்கும் நோக்கத்திற்காக கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய உத்தரவின்படியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடியும், நிறுவனத்தின் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குனர்களின் கூட்டம் காணொளிக் காட்சி மூலம் ஜாவர் பிளாசா, 3வது தளம், 1-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034, தமிழ்நாடு, இந்தியா, என்ற முகவரியில் உள்ள நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் **மார்ச் 28, 2026 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு** நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குனர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் நகல்களையும், பிரிவு 230 இன் கீழ் உள்ள அறிக்கையையும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திலோ அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு, சுதீர் ரெட்டி, நிறுவனச் செயலாளர், ஜாவர் பிளாசா, 3வது தளம், 1-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034, தமிழ்நாடு, இந்தியா, என்ற முகவரியில் இலவசமாகப் பெறலாம்.

கூட்டங்களில் கலந்துகொள்ளவும் வாக்களிக்கவும் தகுதியுள்ள நபர்கள் நேரிலோ அல்லது பிரதிநிதி மூலமாகவோ வாக்களிக்கலாம், பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் உள்ள அனைத்து பிரதிநிதிகளும், ஜாவர் பிளாசா, 3வது தளம், 1-A. நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரியில் உள்ள நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் கூட்டத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக பதிவு செய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் பதிலாள் படிவங்களைப் பெறலாம்.

பாதுகாக்கப்பட்ட கடனாளிகளின் கூட்ட தலைவராக திரு. ராஜ் குமார் சர்மாவையும், ஆய்வு செய்பவராக திருமதி. நந்தினி அகர்வால் அவர்களையும் மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (NCLT) நியமித்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டம், கூட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டால், தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (NCLT) யின் அடுத்தடுத்த ஒப்புதலுக்கு உட்பட்டது.

AAPEX பவர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக,
ஒப்பம்/-
திரு. ராஜ் குமார் சர்மா
பிப்ரவரி 25, 2026 தேதியிட்டது
தலைவர்
தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (NCLT) சென்னை அமர்வால் கூட்டத்திற்கு நியமிக்கப்பட்டவர்.

படிவம் எண். RSC – 4

(விதி 3 (3)–ன் படி)

தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் முன்பாக, சென்னை அமர்வு
CP/10/(CHE)2026

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் விஷயத்தில்

மற்றும்

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 66 மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகள் மற்றும் தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் (நிறுவனத்தின் பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான நடைமுறை) விதிகள், 2016–ன் விஷயத்தில்

மற்றும்

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் விஷயத்தில்
பதிவு அலுவலகம்: ஓமலூர் ரோடு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம் – 636302

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்
CIN: U17111TZ1977PLC000776
நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்,
பதிவு அலுவலகம்: ஓமலூர் ரோடு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம் – 636302
சார்பாக அதன் இயக்குநர் [திரு. R.ஜெகதீசன் DIN No.01153985]
...மனுதாரர் நிறுவனம்

அறிவிப்பு வெளியீடு

மேற்கண்ட நிறுவனத்தின் பங்கு மூலதனத்தை தலா ரூ.10 (ரூபாய் பத்து மட்டும்) மதிப்பிலான 1,15,25,540 முழுமையாகச் செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குகளைக் கொண்ட ரூ.11,52,55,400 (ரூபாய் பதினொரு கோடியே ஐம்பத்து இரண்டு லட்சத்து ஐம்பத்து ஐயாயிரத்து நானூறு மட்டும்)–லிருந்து தலா ரூ.10 (ரூபாய் பத்து மட்டும்) மதிப்பிலான 1,06,48,831 முழுமையாகச் செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குகளைக் கொண்ட ரூ. 10,64,88,310 (ரூபாய் பத்து கோடியே அறுபத்து நான்கு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து முந்நூற்று பத்து மட்டும்) ஆக குறைப்பதை உறுதி செய்வதற்காக, டிசம்பர் 15, 2025 அன்று தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர் நிறுவனத்தின் ஈடுபெற்ற கடன் வழங்கியவர்களுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அது குறித்து அவர்கள் கருத்து தெரிவிக்க, படிவம் எண் RSC–3–ல் [தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் (நிறுவனத்தின் பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான நடைமுறை) விதிகள், 2016–ன் விதி 3(1)(iii)–ன் படி] அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

பிப்ரவரி 10, 2026 தேதியிட்ட சென்னை தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாய அமர்வின் உத்தரவின்படியும், அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடியும், மனுதாரர் நிறுவனத்தின் கடன் வழங்கியவர்கள் எவருக்கேனும் இந்த மனுவின் மீது ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், அதை உரிய ஆதார ஆவணங்களுடனும், அவரது பெயர் மற்றும் முகவரி விவரங்களுடனும், மற்றும் அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் (யாரேனும் இருந்தால்) பெயர் மற்றும் முகவரியுடனும், கீழே கையொப்பமிட்டுள்ள மனுதாரர் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு, மனுவின் அடுத்த விசாரணைக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியான மே 25, 2026–க்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்கூறிய காலத்திற்குள் எவ்வித ஆட்சேபனைகளும் பெறப்படாவிட்டால், கடன் வழங்கியவர்களின் பட்டியலில் உள்ள பதிவுகள், மனுதாரர் நிறுவனத்தின் பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான மேற்கண்ட மனுவின் கீழான அனைத்து நடவடிக்கைகளிலும் சரியானதாகக் கருதப்படும்.

தீர்ப்பாயம் (சென்னை அமர்வு) இந்த மனுவை மே 30, 2026 அன்று விசாரிக்க உள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ளவும். கடன் வழங்கியவர்கள் யாரேனும் விசாரணையில் கலந்துகொள்ள விரும்பினால், அவர் தனது ஆட்சேபனைகளுடன் (ஏதேனும் இருந்தால்) அதற்கான ஒரு கோரிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும்.

இது சேலத்தில் பிப்ரவரி 23, 2026 அன்று தேதியிடப்பட்டது

R ஜெகதீசன்
நிர்வாக இயக்குநர் (DIN: 01153985)

2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 12, 13வது பிரிவுகளின் கீழ் மனு தொடர்பான பொது அறிவிப்பு பிராந்திய இயக்குனர் தென் பிராந்தியம் சென்னை முன்பாக

2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டம் 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 12, 13வது பிரிவுகள் மற்றும் 2014-ம் வருடத்திய கம்பெனிகள் (நிறுவப்பட்டது) விதிமுறைகளில் 28-வது விதிமுறை தொடர்பாக

மற்றும்

எஸ் அண்ட் வி லோகா ஹாஸ்பிடல் பிரைவேட் லிமிடெட் தொடர்பாக

மற்றும்

எஸ் அண்ட் வி லோகா ஹாஸ்பிடல் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம் : எண்.327, சூரமங்கலம் மத்திய சாலை, சேலம்,
தமிழ்நாடு, இந்தியா -636009 **... மனுதாரர்**

எதிர்

கம்பெனிகள் பதிவாளர்
எண்.7, ஏ.ஜி.டி பிசினஸ் பார்க், I தளம், II பேஸ், அவிநாசி சாலை,
சிவில் ஏரோ ட்ரோம் போஸ்ட், கோவை–641 014 **... எதிர் மனுதாரர்**

பொது அறிவிப்பு

மனுதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்தை **"தமிழ்நாடு மாநிலத்தின் சேலத்திலிருந்து" "தமிழ்நாடு மாநிலத்தின் கரூருக்கு"** மற்றும் **கோயம்புத்தூர் நிறுவனங்கள் பதிவாளர்** அலுவலகத்திலிருந்து **"சென்னை நிறுவனங்கள் பதிவாளர்"** அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்வது தொடர்பாக 02.02.2026 அன்று நடைபெற்ற மனுதாரர் கம்பெனியின், "சிறப்பு பொதுப்பேரவைக் கூட்டத்தில்" நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின் படி கம்பெனியின் "அமைப்பு முறையேட்டில்" (Memorandum of Association) மேற்கொள்ளப்பட்ட திருத்தும் தொடர்பாக ஊர்ஜிதம் கோரி 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 12, 13வது பிரிவுகளின் கீழ் மண்டல இயக்குனருக்கு, தெற்கு மண்டலம், சென்னை (Regional Director) மனு ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனியானது உத்தேசித்துள்ளது என்பது இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்தை இடமாற்றம் செய்வது தொடர்பாக தாம் பாதிப்படைவதாக கருதும் ஏதேனும் நபர் தங்களது ஆட்சேபணைகளையும், பதிவு அலுவலகத்தை சேலத்திலிருந்து கரூருக்கு மாற்றுவது தொடர்பாக தங்களது எதிர்ப்பிற்கான காரணங்களையும் எழுத்து பூர்வமான பிரமாணப் பத்திரமாக (Affidavit) தயாரித்து அதனை இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து இருபத்தியொரு தினங்களுக்குள் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ மண்டல இயக்குனருக்கு அனுப்பித் தெரிவித்து விட்டு அதன் நகல் ஒன்றை மனுதாரர் கம்பெனியின் மேற்குறிப்பிட்ட பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மனுதாரர் கம்பெனிக்காகவும், அதன் சார்பாகவும்
Sd/-
வாணி மலர்விழி சுந்தரபாண்டியன்
நிர்வாக இயக்குனர்
தேதி : 25.02.2026
இடம் : சேலம்
DIN: 00666553

படிவம் எண். CAA-2

[நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 230 (3) மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள், 2016-ன் விதி 6 மற்றும் 7-ன் கீழ்]

CA(CAA)/104(CHE)/2025

AAPEX அபக்ஸ் பவர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்,
(பரிமாற்றப்படும் நிறுவனம்)

மற்றும்

PPN பவர் ஜெனரேட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
(பரிமாற்றிக்கொள்ளும் நிறுவனம்)

மற்றும்

அவர்களுடைய பங்குதாரர்கள் மற்றும் கடனாளிகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள் திட்டம் விஷயமாக

PPN பவர் ஜெனரேட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
நிறுவனங்கள் சட்டம், 1956 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம்,
அதன் பதிவு அலுவலகம் : ஜாவர் பிளாசா, 3வது தளம்,
1-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034,
தமிழ்நாடு, இந்தியா, ,,, விண்ணப்பதாரர் / பரிமாற்றிக்கொள்ளும் நிறுவனம்

பரிமாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் சமபங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்களின் கூட்டங்கள் குறித்த அறிவிப்பு மற்றும் விளம்பரம்

பிப்ரவரி 10, 2026 தேதியிட்ட உத்தரவின் மூலம், மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வு, விண்ணப்பதாரர் நிறுவனத்தின் சமபங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநர்கள் மற்றும் பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்களின் கூட்டங்களை நடத்த உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம், AAPEX பவர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், (பரிமாற்றப்படும் நிறுவனம்) மற்றும் PPN பவர் ஜெனரேட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் (பரிமாற்றிக்கொள்ளும் நிறுவனம்) மற்றும் அவர்களின் பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்குநர்கள் இடையேயான ஒருங்கிணைப்புத் திட்டத்தை பரிசீலித்து, தேவைப்பட்டால், மாற்றங்களுடன் அல்லது மாற்றங்கள் இல்லாமல் ஒப்புதல் அளிக்கும் நோக்கத்திற்காக இது நடத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய உத்தரவின்படியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடியும், நிறுவனத்தின் சமபங்குதாரர்களின் கூட்டம் காணொளிக் காட்சி மூலம் ஜாவர் பிளாசா, 3வது தளம், 1-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034, தமிழ்நாடு, இந்தியா, என்ற முகவரியில் உள்ள நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் **மார்ச் 28, 2026 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு** நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் மேற்கூறிய சமபங்குதாரர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய உத்தரவின்படியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடியும், நிறுவனத்தின் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநர்களின் கூட்டம் காணொளிக் காட்சி மூலம் ஜாவர் பிளாசா, 3வது தளம், 1-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரியில் உள்ள நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் **மார்ச் 28, 2026 சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு** நடைபெறும் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குனர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய உத்தரவின்படியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடியும், நிறுவனத்தின் பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்களின் கூட்டம் காணொளிக் காட்சி மூலம் ஜாவர் பிளாசா, 3வது தளம், 1-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034, தமிழ்நாடு, இந்தியா, என்ற முகவரியில் உள்ள நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் **மார்ச் 28, 2026 சனிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு** நடைபெறும் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் மேற்கூறிய பாதுகாப்பற்ற கடன் வழங்குனர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் நகல்களையும், பிரிவு 230 இன் கீழ் உள்ள அறிக்கையையும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திலோ அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திருமதி கீர்த்தி பாஃப்னா, நிறுவனச் செயலாளர், ஜாவர் பிளாசா, 3வது தளம், 1-A. நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034, தமிழ்நாடு, இந்தியா, என்ற முகவரியில் இலவசமாகப் பெறலாம்.

கூட்டங்களில் கலந்துகொள்ளவும் வாக்களிக்கவும் தகுதியுள்ள நபர்கள் நேரிலோ அல்லது பிரதிநிதி மூலமாகவோ வாக்களிக்கலாம், பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் உள்ள அனைத்து பிரதிநிதிகளும், ஜாவர் பிளாசா, 3வது தளம், 1-A. நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரியில் உள்ள நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் கூட்டத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக பதிவு செய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் பதிலாள் படிவங்களைப் பெறலாம்.

சமபங்குதாரர்கள், பாதுகாக்கப்பட்ட கடனாளிகள் மற்றும் பாதுகாப்பற்ற கடனாளிகள் ஆகியோருக்கான கூட்ட தலைவராக திரு. ராஜ் குமார் சர்மாவையும், ஆய்வு செய்பவராக திருமதி. நந்தினி அகர்வால் அவர்களையும் மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (NCLT) நியமித்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டம், கூட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டால், தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (NCLT) யின் அடுத்தடுத்த ஒப்புதலுக்கு உட்பட்டது.

PPN பவர் ஜெனரேட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட்டிற்காக,
ஒப்பம்/-
திரு. ராஜ் குமார் சர்மா
பிப்ரவரி 25, 2026 தேதியிட்டது
தலைவர்
தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (NCLT) சென்னை அமர்வால் கூட்டத்திற்கு நியமிக்கப்பட்டவர்.

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்
பதிவு அலுவலகம் : இந்தியன் ரயான் காம்பவுண்ட், வேரவல், குஜராத் 362 266.
கிளை அலுவலகம்: 12வது தளம், ஆர் டெக் பார்க், நிர்லான் காம்ப்ளக்ஸ், ஹப் மால் அருகில், கோரேகான் (கி), மும்பை 400 063, மகாராஷ்டிரா.

சுவாதீன அறிவிப்பு [கடனீட்டுச் சொத்து மீதான (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (1) ஐப் பார்க்கவும்]

ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் இடையேயான ஒருங்கிணைப்பின் காரணமாக, 24.03.2025 அன்று அகமதாபாத்தில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட 11.03.2024 தேதியிட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின்படி, கீழே உள்ள அட்டவணை Al குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து தொடர்பாக ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் தொடங்கிய அனைத்து SARFAESI நடவடிக்கைகளும், ஒருங்கிணைந்த நிறுவனமான ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கீழே கையொப்பமிட்டுள்ள **ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்டின்** (ABCL) **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி** அவர்கள்,2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப மேற்படி சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டு கடன்தாரர்களாகிய உங்களை அழைத்து (கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் மற்றும் முகவரிகள்) அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் அதற்கான வட்டியை அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்கள் மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(4) மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகளின் விதி 8ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து **ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்டிற்கு** (ABCL) செலுத்த வேண்டிய தொகைக்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு (8)–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர்கள் பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத் தொகை	அசையா சொத்து குறித்த விவரம் (அடமான சொத்துகள்)	சுவாதீன தேதி
1	1. M/s. **மயூர் கன்சல்டன்சி,** அதன் உரிமையாளர் திரு. சுரேஷ் தாமஸ், **2. திரு. சுரேஷ் தாமஸ்,** (S/0. தாரயில் தாமஸ்), **3. திருமதி. சார்மின் தாமஸ்,** LAN: ABCHNSTS000000520414	கோரிக்கை அறிவிப்பு தேதி: 08.12.2025 08.12.2025 அன்று ரூ.20,74,397/-	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். கட்டிடம். மனை எண். 140, சர்வே எண். 50/10, 20/10 ஆர்.எஸ். எண். 20-10A பகுதி இப்போது டி.எஸ். எண். 32 மற்றும் 2 பகுதி, தொகுதி எண்.16ல் உள்ள விஸ்தீரணம் 1180/12000 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 5315 சதுர அடி நிலத்துடன் குடியிருப்பு பிளாட் எண். சி3, 3வது தளம், 980 சதுர அடி. ஆர்.சி. ஜெம்ஸ், கதவு எண்.40, சிறுவள்ளூர் நெடுஞ் சாலை, சிறுவள்ளூர் கிராமம், பெரம்பூர் தாலுக்கா, சென்னை மாவட்டம். எல்லைகள்: வடக்கு : ஆர்.எஸ்.எண். 20/13ல் உள்ள நிலம், தெற்கு: சிறுவள்ளூர் நெடுஞ்சாலை, கிழக்கு: ஆர்.எஸ்.எண்.20/12 மற்றும் 20/10Bல் உள்ள நிலம், மேற்கு: பீர் கடை சந்து. இந்த சொத்து செம்பியம் சார் பதிவு மாவட்டம், வட சென்னை பதிவு மாவட்டத்தில் உள்ளது.	**23.02.2026** **அடையாள சுவாதீனம்**

இடம் : சென்னை, தமிழ்நாடு
தேதி : 25.02.2026
ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்

HFS | Hiranandani Financial Services

ஹிராநந்தனி பைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 514, தலமால் டவர்ஸ், 211 ப்ரீ பிரஸ் ஜர்னல் மார்க், நாரிமன் பாயிண்ட், மும்பை 400021.
கார்ப்பரேட் அலுவலகம்: 9வது தளம், சிக்மா டவர்ஸ், ஹிராநந்தனி பிசினஸ் பார்க், டெக்னாலஜி தெரு, போவாய், மும்பை 400076.
மின்னஞ்சல்: wecare@hfs.in • **இணையதளம்:** www.hfs.in • **தொலைபேசி எண்:** 022-25763623 • **CIN No.: U65999MH2017PTC291060**

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 ("சட்டம்") மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் ("விதிகள்")கீழ்

ஹிராநந்தனி பைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்டின் (இனி **"HFS"** என்று குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழே கையொப்பமிட்டவர் சட்டப்பிரிவு 13(12) மற்றும் விதி 3ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி, அந்தந்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடன்தாரர்களை கேட்டுக் கொண்டார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பின் சேவையைத் தவிர்க்கிறார்கள் என்று கீழ்க்கையொப்பமிடப்பட்டவர் நம்புகிறார், எனவே விதிகளின்படி கோரிக்கை அறிவிப்பினை ஒட்டுதல் மற்றும் வெளியீடு மூலம் செயல்படுத்தப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

கடன் கணக்கு எண் & கடன்தாரர் / உடன் கடன்தாரர்கள் பெயர் / முகவரி	13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் மொத்த நிலுவைத் தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள்/அசையா சொத்துகள் குறித்த விவரம்
கடன் கணக்கு எண் :4375048101020962 **வாடிக்கையாளர் ஐடி 18759** **ஹரீஷ் இன்ஜினியரிங் (கடன்தாரர்)** **முருகேசன் கே (உடன் கடன்தாரர்)** **உமாகாந்தன் கே (உடன் கடன்தாரர்)** **லட்சுமி கே (உடன் கடன்தாரர்)** **கண்ணாயிரம் எட்டி (உடன் கடன்தாரர்)** **சித்ரா எம் (உடன் கடன்தாரர்)** வ.எண் 1–க்கான முகவரி: எண் 42 சாத்ராஸ் சாலை, திருக்கழுக்குன்றம், சென்னை, காஞ்சிபுரம், தமிழ்நாடு, இந்தியா – 603109. வ.எண் 2 மற்றும் 6–க்கான முகவரி: கதவு எண் 11/6 புதிய தெரு, சாத்ராஸ் சாலை, மங்கலம், திருக்கழுக்குன்றம், சென்னை, காஞ்சிபுரம், தமிழ்நாடு, இந்தியா – 603109.வ.எண் 3, 4 மற்றும் 5–க்கான முகவரி: கதவு எண் 41 மேற்குத் தெரு, மங்கலம், திருக்கழுக்குன்றம், சென்னை, காஞ்சிபுரம், தமிழ்நாடு, இந்தியா – 603109.	**தேதி : 23.02.2026** **கடன் கணக்கு எண். 4375048101020962**க்கு **17.02.2026 அன்று ரூ. 22,97,802/–** (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூற்று இரண்டு மட்டும்) & **என்பிஏ தேதி : 02.02.2026**	செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருக்கழுக்குன்றம் சார் பதிவாளர் எல்லைக்குட்பட்ட, செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம் மற்றும் ஒன்றியம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள எண். 61 மங்கலம் கிராமத்தில் உள்ள, புஞ்சை சர்வே எண் 95/11–ல் 0.11 ஏர்ஸ், 799½ சதுர அடி பரப்பளவும், எண். 61 மங்கலம் கிராமம், கிராமநத்தம் பட்டா எண். 41–ஐக் கொண்ட, பழைய சர்வே எண் 95/பகுதி, புதிய சர்வே எண் 446/5–ல் அடங்கிய 00276 சதுர மீட்டர் (அல்லது) 2398 சதுர அடி பரப்பளவைக் கொண்ட அனைத்து காலி நிலப் பகுதியும்; இதன் நான்கு எல்லைகள்: வடக்கே – ஏகாம்பரம் என்பவருக்கு விற்பனைப் பத்திரம் மூலம் வழங்கப்பட்ட நிலம், தெற்கே – எனது பாக நிலம், கிழக்கே – அங்கு நாயக்கர் குடும்ப புஞ்சை நிலம், மேற்கே – சாலை தெரு; இதன் நான்கு அளவீடுகள்: வடக்கே – 10 அடி, தெற்கே – 10 அடி, கிழக்கே – 82 அடி, மேற்கே – 82 அடி; ஆகியவற்றுடன் நிலத்துடன் நிரந்தரமாக இணைக்கப்பட்ட பொருளுடன் கூடிய அனைத்து தற்போதைய மற்றும் எதிர்கால கட்டுமானங்கள் அனைத்தும் உள்ளடங்கியது.

கோரிக்கை அறிவிப்புகளுக்கு இணங்கி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைத் தொகையை, இந்த வெளியீடு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள், பணம் செலுத்தப்படும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி, தாமதமாக செலுத்தும் அபராதம், பவுன்ஸ் கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றுடன் செலுத்துமாறு கடன்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். HFS ஒரு பாதுகாப்பான கடனாளர் என்பதையும், கடன்தாரர்களால் பெறப்படும் கடன் வசதி என்பது கடன்தாரரால் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் என்பதையும் கடன்தாரர்(கள்) கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கடன்தாரர்கள் தங்கள் பொறுப்புகளை முழுமையாகச் செலுத்தத் தவறினால், கடன்தாரர்களின் கடன் கணக்கில் நிலுவைத் தொகையை பெறுவதற்காக, சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின் கீழ் கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் தீர்வாக விற்பனை செய்வதன் மூலம் அல்லது மாற்றுவது உட்பட பாதுகாக்கப்பட்ட சொத்தை சுவாதீனம் செய்ய சட்டப் பிரிவு 13(4)ன் கீழ் அனைத்து உரிமைகளையும் பயன்படுத்த HFSக்கு உரிமை உண்டு. விற்பனை அல்லது பரிமாற்ற உரிமையைச் செயல்படுத்துவதற்கு முன், பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை இணைக்க மற்றும்/அல்லது சீல் செய்ய HFS அதிகாரம் பெற்றுள்ளது. பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் விற்பனைக்குப் பிறகு, HFSக்கு கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை ஈடுகட்ட, பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு போதுமானதாக இல்லாவிட்டால், மீதி பாக்கி தொகையை மீட்டெடுப்பதற்கு தனியான சட்ட நடவடிக்கைகளை தொடங்க HFSக்கு உரிமை உள்ளது. HFSக்கு வேறு எந்த சட்டத்தின் கீழும் கிடைக்கும் மற்ற எல்லா தீர்வுகளிருந்தும் கூடுதலாகவும் சுயாதீனமாகவும் இந்த தீர்வு உள்ளது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. சட்டப்பிரிவு 13(13)ன் கீழ் HFS முன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் கடன்தாரர்கள் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை அப்புறப்படுத்துவது அல்லது கையாள்வது அல்லது விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில் (சாதாரண வணிகத்தைத் தவிர) பாதுகாப்பான சொத்துக்களை மாற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது மற்றும் மேலும் மேற்கூறியவற்றை பின்பற்றாதது சட்டப்பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்புகளின் நகல் கீழே கையொப்பமிடப்பட்டவர்களிடம் உள்ளது மற்றும் கடன்தாரர்கள் விரும்பினால் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து எந்த வேலை நாளிலும் அலுவலக நேரத்தில் அதனை பெற்றுக் கொள்ளலாம்.

இடம் : செங்கல்பட்டு, தமிழ்நாடு
தேதி : 25.02.2026
ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஹிராநந்தனி பைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்

---

pvp

பிவிபி வென்சர்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் : கதவு எண்.2, 9வது தளம், கேஆர்எம் மையம், ஹாரிங்டன் ரோடு, சேத்பட்டு, சென்னை 600 031.
Web: www.pvpglobal.com; Email: investorrelations@pvpglobal.com;
Tel: 044 30285570 | CIN: L72300TN1991PLC20122

31 டிசம்பர் 2025ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(செபி பட்டியல் விதிமுறைகள், 2015ன் ஒழுங்குமுறை 33ன் கீழ் பத்திரிக்கை வெளியீட்டு நோக்கத்தின்படி)

(ரூ. லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	தனியானது			ஒருங்கிணைந்தது		
		முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு
		31.12.2025 தணிக்கை செய்யாதது	31.12.2024 தணிக்கை செய்யாதது	31.03.2025 தணிக்கை செய்தது	31.12.2025 தணிக்கை செய்யாதது	31.12.2024 தணிக்கை செய்யாதது	31.03.2025 தணிக்கை செய்தது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	1,095.58	273.72	2,818.48	1,709.26	525.59	3,861.18
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(18.47)	(191.14)	125.14	(185.21)	(256.31)	(215.31)
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(18.47)	(191.14)	(544.55)	(185.21)	(256.31)	(885.00)
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(217.99)	(8.48)	(390.40)	(405.85)	(73.52)	(856.11)
5	காலத்திற்கான மொத்த இதர விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	(238.58)	5.48	(473.78)	(426.44)	(59.56)	(936.11)
6	சமபங்கு மூலதனம் (ஒன்றின் முகமதிப்பு ரூ. 10)	26,040.37	26,040.37	26,040.37	26,040.37	26,040.37	26,040.37
7	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (வருடாந்திரமல்ல) ஒன்று ரூ.10/–						
	அடிப்படை	(0.09)	(0.00)	(0.15)	(0.14)	(0.02)	(0.26)
	டைலூட்டட்	(0.09)	(0.00)	(0.15)	(0.14)	(0.02)	(0.26)

குறிப்பு:

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு அன்று நடந்த குழு கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, அன்றைய தினம் நடந்த இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன. மேற்கண்ட காலாண்டு முடிவுகளை சட்ட தணிக்கையாளர்கள் மறுஆய்வு செய்தனர்.
2. SEBI (பட்டியல் மற்றும் பிற வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதிமுறை 33ன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட டிசம்பர் 31, 2025ல் முடிவடைந்த காலாண்டுக்கான தனியான நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் www.bseindia.com, www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.pvpglobal.com–ல் கிடைக்கும்.

இயக்குனர்கள் குழுவின் சார்பாக
ஒப்பம்/–
பிரசாத் வி. பொட்லூரி
சேர்மன் & நிர்வாக இயக்குனர்

இடம் : ஹைதராபாத்
தேதி : பிப்ரவரி 23, 2026



குமரமங்கலத்தில் நடனப்பயிற்சியின்போது உயிரிழந்த மாணவியின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிவாரணம்

நாமக்கல், பிப். 25–

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் ஊராட்சியில் பள்ளி நூற்றாண்டு விழாவுக்கான நடனப் பயிற்சியின்போது மயங்கி விழுந்து உயிரிழந்த 8 வயது மாணவியின் குடும்பத்துக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் வழங்கப்பட்டது.

நாமக்கல் கலெக்டர் துர்காமூர்த்தி திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் முன்னிலையில், உயிரிழந்த மாணவியின் பெற்றோருக்கு ரூ.3 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

குமரமங்கலம் கிராமம் கவுண்டம் பாளையம் குடித்தெருவைச் சேர்ந்த மாதேஸ்வரன்–தனலட்சுமி தம்பதியினரின் மகள் ரக்ஷிதா (8), குமரமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படித்து வந்தார்.

கடந்த 8ம் தேதி, மறுநாள் நடைபெறவிருந்த பள்ளியின் நூற்றாண்டு விழாவிற்கான நடனப் பயிற்சியின்போது எதிர்பாராத விதமாக மயங்கி விழுந்தார். பின்னர் நாமக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், 9ம் தேதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதையடுத்து, உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டிருந்தார். அதன்படி, கலெக்டர் சிறுமியின் இல்லத்துக்குச் சென்று, குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகைக்கான காசோலையை வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் லெனின், முதன்மை கல்வி அலுவலர் எழிலரசி உள்ளிட்ட துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

தருமபுரி மாவட்டம் வாச்சாத்தி முதல் கலசப்பாடி வரை ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் சாலை, உயர்மட்ட பாலம்

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்

தருமபுரி, பிப். 25–

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கலசப்பாடி பகுதியில் வாச்சாத்தி முதல் கலசப்பாடி வரை ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட 5.2 கி.மீ., தார்சாலை மற்றும் உயர்மட்ட பாலம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

விழாவில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திட்டத்தைத் திறந்து வைத்தார். கலெக்டர் ரெ.சதீஷ் முன்னிலை வகித்தார்.

சித்தேரி கிராம ஊராட்சிக்கு உட்பட்ட கலசப்பாடி, அரசநத்தம், கோட்டக்காடு, புளியமரத் துவளவு, கினத்துவளவு, ஆலமரத்துவளவு, தரிசுக்காடு, கருக்கம்பட்டி, சோளக்காட்டுமதுவு, நைனாவளவு, அக்கரைக்காடு உள்ளிட்ட மலைக் கிராமங்கள் இந்தச் சாலை மற்றும் பாலம் மூலம் பயனடைய உள்ளன. இப்பகுதிகளில் சுமார் 4 ஆயிரம் மலைவாழ் பழங்குடியினர் வசித்து வருகின்றனர். கடந்த 60 ஆண்டுகளாக தார்சாலை, மருத்துவம், உயர்கல்வி, போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாததால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில், சித்தேரி ஊராட்சி நலுங்குப்பாறை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கப்பட்டுள்ளதும், 5.2 கி.மீ. தூர தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் தருமபுரி மக்களவை உறுப்பினர் ஆ.மணி, மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, அரூர் நகராட்சி துணைத் தலைவர் தனபால், வருவாய் கோட்டாட்சியர் செம்மலை, அரூர் நகராட்சி கமிஷனர் ஹேமலதா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். முன்னாள் அமைச்சர் பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தடங்கம் பெ.சுப்பிரமணி, வேடம்மாள், மனோகரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், பொதுமக்களும் பங்கேற்றனர்.

கரூர் மாவட்ட புதிய கலெக்டராக ரவிக்குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சிறந்த கேம்பிரிட்ஜ் மாணவர் விருதுகள் பட்டியல் வெளியீடு

கோவை, பிப். 25–

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம் மற்றும் மதிப்பீடு அமைப்பின் சர்வதேச கல்விப் பிரிவு, 2024 நவம்பர் மற்றும் 2025 மார்ச், ஜூன் தேர்வுத் தொடர்களுக்கான 'சிறந்த கேம்பிரிட்ஜ் மாணவர் விருதுகள்' பட்டியலை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் 12 பள்ளிகளைச் சேர்ந்த 17 மாணவர்கள், கேம்பிரிட்ஜ் மதிப்பீடு அமைப்பின் சர்வதேச கல்விப் பிரிவு நடத்தும் ஐஜிசிஎஸ்இ மற்றும் ஏஎஸ் மற்றும் ஏ லெவல் தேர்வுகளில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று விருதுகளுக்குத் தேர்வாகியுள்ளனர். இந்திய அளவில் 227க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த விருதுகளைப் பெற்றுள்ளனர்.

உலகம் முழுவதும் 40 க்கும் மேற்பட்ட நாடுகளில் கேம்பிரிட்ஜ் தேர்வுகளை எழுதும் மாணவர்களின் கல்விச் சாதனைகளை இந்த விருதுகள் கௌரவிக்கின்றன. குறிப்பிட்ட பாடங்களில் உலகளவிலும், இந்திய அளவிலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர். மேலும், ரஸ்ஸெல் குருப் பல்கலைக்கழகங்களின் இந்திய கிளை வளாகங்கள், விருது பெற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகளை அறிவித்துள்ளன.

கேம்பிரிட்ஜ் சர்வதேச கல்வியின் தெற்காசிய பிராந்திய இயக்குநர் வினய் சர்மா வெளியிட்ட அறிக்கையில், "இந்திய மாணவர்களின் கல்விச் சாதனைகளை கொண்டாடுவதில் பெருமை கொள்கிறோம். அவர்களின் வெற்றி அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் உயர்ந்த கல்வித் திறனின் வெளிப்பாடாகும். இந்த விருதுகள் மாணவர்களை மட்டுமல்லாது, அவர்களுக்கு ஆதரவாக இருந்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களையும் கௌரவிக்கின்றன" என்று தெரிவித்துள்ளார்.

நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்)
பதிவு அலுவலகம் : யூனிட் எண்.305, 3வது தளம், விங் 2/E, கார்ப்பரேட் அவென்யூ, அந்தேரி கட்கோபர் லிங்க் சாலை, சக்லா, அந்தேரி (கிழக்கு), மும்பை 400 093.
Email: - connect@niwashfc.com CIN Number: - U65990MH2016PLC271587
தொடர்பு எண்: திரு.பலவேசம் – 9865783351/திரு. இம்மானுவேல் சாம் – 9894856055
NIWAS HOUSING FINANCE

பிற்சேர்க்கை – IV – A (விதி 8(6)–ஐ பார்க்க)

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002–ன்கீழ் கடனாளிகளிடமிருந்து செலுத்த வேண்டிய தொகையை திரும்பப் பெறுவதற்காக NHFL-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கையகப்படுத்தப்பட்டுள்ள ஈடுபெற்ற ஆஸ்திகள் கீழ்க்கையொப்பமிட்டவரால் விற்பனை செய்யப்பட உள்ளன. அதற்கான ஆன்லைன் ஏலங்கள் எங்கள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு மற்றும் மின்னணு ஏல சேவை கூட்டாளரான Credresolution India pvt Ltd இணையதளம் credauction.com–ல் வரவேற்கப்படுகின்றன. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. மேற்கண்ட சொத்து கையகப்படுத்தும்போது ''எவ்வாறு எப்படி இருந்ததோ அப்படியே'', ''உள்ளது உள்ளபடி அடிப்படையில்'' மற்றும் ''எந்தவித மாற்றமும் செய்யப்படாமல்'' விற்பனை செய்யப்பட உள்ளது. அதன் விவரங்கள் வருமாறு

கடன்தாரர் விவரங்கள்	13(2)–ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	ரிசர்வ் விலை டேவணித் தொகை ஏல அதிகரிப்பு தொகை	மின்னணு ஏலத்தேதி மற்றும் நேரம்
LNCOI0HL-01250052826 கிளை: கோயம்புத்தூர்–சிங்காநல்லூர் கடன்தாரர்: பாபுதீன் எம் உடன் கடன்தாரர்(கள்): முபீனா பி	14/11/2025 12/11/2025 நிலவரப்படி ரூ.15,20,310/– (ரூபாய் பதினைந்து லட்சத்து இருபதாயிரத்து முன்னூற்று பத்து மட்டும்) மற்றும் மேலும் வட்டி மற்றும் தொகையை திரும்ப செலுத்தும் நாள் வரையிலான கட்டணங்கள்	ரூ.14,40,000/- ரூ.1,44,000/- ரூ.10,000/-	30/03/2026 நேரம் : காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்

சொத்து குறித்த விவரம் : சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி தாலுக்கா, கஞ்சம்பட்டி கிராமம், எஸ்.எப்.எண்.143/1C, எஸ்.எப்.எண்.142/1 மற்றும் எஸ்.எப்.எண்.142/2A மற்றும் எஸ்.எப்.எண்.143/2A மற்றும் எஸ்.எப்.எண்.143/2A. எஸ்.எப்.எண்.141/1, புதிய துணைப்பிரிவு 141/1A–ன்படி "கோடீஸ்வரன் நகரில்" மனை எண்கள்.7,8 ஆகியவற்றில் கீழ்க்கண்ட எல்லைகளுக்கு உட்பட்டு இந்த சொத்து உள்ளது. DTCP NO.43/2019. மனை எண்.7–க்கான எல்லைகள் : வடக்கு: 20 அடி கிழக்கு மேற்காக சாலை, தெற்கு: வைக்கல், கிழக்கு: மனை எண்.6, மேற்கு: மனை எண்.8. விஸ்தீரணம் : கிழக்கு மேற்காக வடக்குப் பக்கத்தில் : 30.3 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கத்தில் : 30 அடி, வடக்கு தெற்காக மேற்குப் பக்கத்தில் : 36.9 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கத்தில் : 40.9 அடி. மொத்த விஸ்தீரணம் 1167 சதுர அடி நிலம் (108.45 சதுர மீட்டர்). இந்த சொத்தானது எஸ்.எப்.எண். 141/1A1A–ல் உள்ளது. மனை எண்.8–க்கான எல்லைகள்: வடக்கு: 20 அடி கிழக்கு மேற்காக லேஅவுட் சாலை, தெற்கு: வைக்கல், கிழக்கு: மனை எண்.7, மேற்கு: மனை எண்.9. விஸ்தீரணம் : கிழக்கு மேற்காக வடக்குப் பக்கத்தில் : 30.3 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கத்தில் : 30 அடி, வடக்கு தெற்காக மேற்குப் பக்கத்தில்: 40.9 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 44.9 அடி. மொத்த விஸ்தீரணம் 1287 சதுர அடி நிலம் (119.64 சதுர மீட்டர்). இந்த சொத்து எஸ்.எப்.எண்.141/1A1A–ல் உள்ளது.

மின்னணு ஏலத்திற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:
1. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, www.niwashfc.com மற்றும் எங்கள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மின்ஏல சேவை வழங்குநரின் இணையதளம், Credauction.com, NHFL இணையதளத்தில் வழங்கப்பட்ட இணைப்பைப் பார்க்கவும்.
2. தேவையான ஆவணங்களான கேஒய்சி உடன் கூடிய ஏலப் படிவத்தை 28/03/2026 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கலாம்.
3. இது எங்கள் இணையதளம் – https://www.niwashfc.com/Auction-Notices என்ற இணைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.
4. எந்தவொரு விசாரணைக்கும், தகவல் மற்றும் சொத்து ஆய்வு, உதவி, நடைமுறை மற்றும் மின்னணு ஏலத்திற்கான ஆன்லைன் பயிற்சிக்கும் வருங்கால ஏலதாரர்கள் எங்கள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மின்னணு ஏல சேவை பங்குதாரரின் கிளையண்ட் சர்வீஸ் டெலிவரி (CSD) துறையை தொடர்பு கொள்ளலாம்

Credresolution India pvt Ltd, **தொலைபேசி எண்: +91 9137100020 & 9819167197 மின்னஞ்சல் முகவரி:** balram@credsolv.com **அல்லது** amit@credsolv.com, **NHFL அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி. திரு.பலவேசம் – 9865783351/திரு. இம்மானுவேல் சாம் – 9894856055**

***குறிப்பு: NHFL அனைத்து கடன்தாரர்களுக்கும் ஸ்பீடு/பதிவு தபால் மூலம் விற்பனை அறிவிப்பை வழங்க இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளவும். எந்தவொரு தரப்பினராலும் அது பெறப்படாதபட்சத்தில், இந்த விற்பனை அறிவிப்பு வெளியீடு ஒரு மாற்று சேவை முறையாகக் கருதப்படும்.**

இடம் : திருப்பூர் **ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
தேதி : 25.02.2026 **நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

IndiaShelter Home Loans
இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
அசையா சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
கார்ப்பரேட் அலுவலகம்: 6வது தளம், மனை –15, இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, செக்டார் – 44, குருகிராம் – 122003, ஹரியானா. **கிளை அலுவலகம் :** எண்.2, கதவு எண்.11, 2வது தளம் கமர்ஷியல் காம்பிளக்ஸ், வ.உ.சி தெரு, சிவன்கோவில் எதிரில், காஞ்சிபுரம், கோகுலபுரம், தமிழ்நாடு – 603 002

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் (இனிமேல் "சட்டம்" என்று குறிப்பிடப்படும்) மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8(6)ன் (இனி விதிகள் "என்று குறிப்பிடப்படுகின்றன") கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு.

பதிவு அலுவலகம் மற்றும் 409/A, **முதல் தளம், ஸ்ரீ ஆச்சி டவர், ப்ரோ சாலை, பெருந்துறை, ஈரோடு, தமிழ்நாடு 638 011 –ல்** கிளை அலுவலகம் கொண்டு செயல்படும் இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள/ஈடாக வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் (இனி ஈடுபெற்ற கடன் வழங்கியவர் என்று குறிப்பிடப்படும்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் எடுக்கப்பட்டு "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே", "எந்தவித மாற்றமும் இல்லாமல்" மற்றும் "உள்ளது உள்ளவாறு" என்ற அடிப்படையில், கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையை மீட்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்), உடன் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு(கள்) அல்லது பிரதிநிதி(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் விற்பனை செய்யப்படும்.

கடன் கணக்கு எண்./ஏபி எண் மற்றும் கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள் / உத்தரவாததாரர்கள் பெயர்	பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவை தொகை: 19.08.2023 ரூ.15,26,298	சுவாதீனத் தேதி மற்றும் வகை 18.02.2026 சுவாதீனம்	ரிசர்வ் விலை ரூ.21,25,000/-	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் : 25.03.2026
LAERCLLONS000005052878/ AP-10119600 திரு./ திருமதி. வினிதா சக்திவேல் திரு./திருமதி. விக்னேஷ் ஜெயராம்	ஏல அதிகரிப்பு தொகை ரூ.50,000/-	மொத்த நிலுவைத் தொகை 20.02.2026 அன்று ரூ.19,37,604.36/–	டேவணித் தொகை டெபாசிட் (EMD) ரூ.2,12,500	EMD டெபாசிட்டிற்கான கடைசித் தேதி : 26.03.2026 ஏலத் தேதி: 27.03.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

அசையா சொத்து/ஈடுபெற்ற ஆஸ்தி குறித்த விவரம்: ஈரோடு பதிவு மாவட்டம், சிவகிரி சார்–பதிவு மாவட்டம் , கொடுமுடி தாலுகா, சிவகிரி கிராமம், மறு நில அளவை எண் 672/1, பி.ஹெக்டேர் 2.79.50, கிஸ்தி ஆர்எஸ்.7.74, தற்போதைய உட்பிரிவின்படி ஆர்.எஸ்.எண். 672/1C, பி.ஹெக்டேர் 2.58.66, கிஸ்தி ஆர்எஸ்.7.16, தற்போதைய உட்பிரிவின்படி ஆர்.எஸ்.எண். 672/1C1, பி.ஹெக்டேர் 2.57.04, கிஸ்தி ஆர்எஸ்.7.12, பட்டா எண் 2720 ஆகியவற்றில் அமைந்துள்ள சொத்தின் அனைத்துப் பகுதிகளும். இதில் கிழக்கு–மேற்காக இருபுறமும் தலா 21 1/2 அடி, வடக்கு–தெற்காக இருபுறமும் தலா 61 அடி, ஆக மொத்தம் 1311 1/2 சதுர அடி அளவுள்ள முழு நிலம், இதனுடன் இணைக்கப்பட்ட கிழக்கு புறமாக செல்லும் 10 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்காக பொதுப்பாதை, தெற்கு புறமாக செல்லும் 17 அடி அகலமுள்ள வடக்கு–தெற்காக பொதுப்பாதைக்கு கிழக்கே, அங்கிருந்து மேற்கு புறமாக சின்னியகவுண்டன்பாளையம் ஊர் நத்தத்திற்கு தெற்கே செல்லும் கிழக்கு–மேற்காக நீளமுள்ள பஞ்சாயத்து பொதுப்பாதை நடைபாதை, வண்டிப்பாதை, கனரக வாகனங்கள் செல்வதற்கான மற்றும் வழித்தட உரிமைக்காகப் பயன்படுத்தும் உரிமையுடன், கழிவுநீர் மற்றும் மழைநீரை மேற்கண்ட எல்லையில் உள்ள 10 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்கான நீர்ப்பாதையில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் 1 1/2 அடி அகலமுள்ள வடக்கு–தெற்கான நீர்ப்பாதையில் கொண்டு செல்லும் உரிமையுடன், இதில் எந்தக் கட்டிடமும் இல்லை, அதே சர்வே எண்ணில் வடக்கு நோக்கி அமைந்துள்ள கிணற்றைப் பயன்படுத்தும் உரிமை மற்றும் வழக்கமான (மாமூல்) பாதை உரிமைகள் ஆகியவற்றுடன். மேற்சொன்ன இந்த சொத்து சிவகிரி பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: 10 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்கான பொதுப்பாதை, கிழக்கே: தங்கவேல் என்பவரின் சொத்து, தெற்கே: கே.என்.பொன்னுசாமி கவுண்டர் என்பவரின் சொத்து, மேற்கே: கே.மணிவேல் என்பவரின் சொத்து, ஆகியவற்றுக்கு உட்பட்ட 1311 1/2 சதுர அடி நிலம்.

EMD டெபாசிட் செய்யப்படும் இடம்/ ஏலம் நடைபெறும் இடம்: ஈரோடு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் பெயர் மற்றும் மொபைல் எண். திரு. சுரேஷ் தேசய்யா (9514255857/ஈரோடு, தமிழ்நாடு)

பணம் செலுத்தும் முறை : அனைத்து கட்டணமும் இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் பெயரில் டிமாண்ட் டிராப்ட் மூலம் செய்யப்பட வேண்டும்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, www.indiashelter.in **என்ற ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் இணையதளத்தைப் பார்க்கவும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியைத் தொடர்பு கொள்ளவும்.**

Arcil
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட் (ஆர்சில்)
பல்வேறு ஆர்சில் அறக்கட்டளைகளின் அறங்காவலராக செயல்படுதல்
பதிவு அலுவலகம்: தி ரூபி, 10வது தளம், 29, சேனாதிபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு) மும்பை – 400 028.
Website: https://auction.arcil.co.in; CIN-U65999MH2002PLC134884

சுவாதீன அறிவிப்பு

